பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**17 05 2026** **7 15**

ஞாயிற்றுக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பிரதமர் திரு. நரேந்திர மோடி, நெதர்லாந்து பிரதமர் திரு. **Rob Jetten** உடன் பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு முக்கிய துறைகள் தொடர்பாக பேச்சுகள் நடத்தினார்.

2. உள்ளாட்சி பிரதிநிதிகள் அர்ப்பணிப்போடு செயல்பட்டு மக்களின் எதிர்ப்பார்ப்புகளை நிறைவேற்றவேண்டும் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா கேட்டுக்கொண்டுள்ளார்.

3. சிந்து நதிநீர் ஒப்பந்தம் தொடர்பாக சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட நடுவர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை இந்தியா நிராகரித்துள்ளது.

4. தலைநகர் தில்லியில், விமான எரிபொருளுக்கான மதிப்பு கூட்டு வரியை **25** சதவீதத்திலிருந்து **7** சதவீதமாகக் குறைத்து அம்மாநில அரசு உத்தரவிட்டுள்ளது.

5. தாய்லாந்து ஓபன் பேட்மிண்டன் ஆடவர் இரட்டையர் பிரிவு இறுதிப் போட்டியில் இந்தியாவின் சாத்விக் சாய்ராஜ் - சிராக் ஷெட்டி இணை இன்று இந்தோனேஷியா இணையை எதிர்கொள்கிறது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி நெதர்லாந்து பிரதமர் திரு. ராப் ஜெட்டன் ஆகியோருக்கு இடையே நேற்று **Hague** நகரில் விரிவான பேச்சுகள் நடைபெற்றது.

இதைத் தொடர்ந்து இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு உறவை உத்திசார்ந்த அந்தஸ்திற்கு உயர்த்த இரு நாடுகளும் ஒப்புக்கொண்டுள்ளன.

இந்த பேச்சுவார்த்தையின் போது வர்த்தகம், பாதுகாப்பு, தொழில்நுட்பம், நீர் மேலாண்மை, தூய்மையான எரிசக்தி, சுகாதாரம் மற்றும் கல்வி உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இருநாடுகளுக்கு இடையிலான ஒத்துழைப்பு குறித்து இரு தலைவர்களும் ஆய்வு செய்தனர்.

மேலும், முன்னுரிமை வாய்ந்த துறைகளில் ஒத்துழைப்பை பலப்படுத்துவதற்கான பல முக்கிய ஒப்பந்தங்களும் கையெழுத்தாகின.

கடந்த பத்தாண்டுகளில் இந்தியா-நெதர்லாந்து உறவுகள் கணிசமான முன்னேற்றத்தைக் கண்டுள்ளதாக பேச்சுவார்த்தையின்போது பிரதமர் திரு. நரேந்திர மோடி குறிப்பிட்டார்.

நெதர்லாந்து நாடானது ஐரோப்பாவில் இந்தியாவின் முதன்மையான கூட்டாளிகளில் ஒன்று என்று அவர் வர்ணித்தார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான உறவு, பகிரப்பட்ட ஜனநாயக விழுமியங்கள், வலுவான பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் இரு நாட்டு மக்களுக்கிடையிலான ஆழமான பிணைப்பு ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்துள்ளது என்றும் அவர் கூறினார்.

வளர்ந்து வரும் புதிய துறைகளில் கூடுதல் ஒத்துழைப்பு தேவை என்று வலியுறுத்திய பிரதமர், நெதர்லாந்தின் நிபுணத்துவத்தையும், இந்தியாவின் வேகம் மற்றும் திறனையும் ஒன்றிணைத்து கண்டுபிடிப்புகள், முதலீடு மற்றும் பாதுகாப்பு ஆகிய துறைகளில் இருநாடுகளுக்கு இடையே ஒத்துழைப்பை புதிய உயரத்திற்குக் கொண்டு செல்ல வேண்டும் என்று திரு. மோடி கேட்டுக்கொண்டார்.

<<<<>>>>

உள்ளாட்சி பிரதிநிதிகள் அனைவரும் முழு அர்ப்பணிப்போடு செயல்பட்டு மக்களின் எதிர்ப்பார்ப்புகளை நிறைவேற்றவேண்டும் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா கேட்டுக்கொண்டுள்ளார்.

குஜராத் மாநிலம் காந்திநகர் மக்களவை தொகுதிக்கு உட்பட்ட காட்லோடியா, வேஜல்பூர், நரோடா மற்றும் சபர்மதி ஆகிய சட்டமன்ற தொகுதிகளில் இருந்து அகமதாபாத் மாநகராட்சிக்கு

தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மாநகராட்சி கவுன்சிலர்களுடன் அகமதாபாத்தில் அவர் நேற்று ஆலோசனை நடத்தினார்.

வெற்றிபெற்ற கவுன்சிலர்களுக்கு வாழ்த்துக்கள் தெரிவித்த அவர், மக்களுக்கு ஆற்ற வேண்டிய சேவைகள் மற்றும் அந்தந்தப் பகுதிகளின் வளர்ச்சிப் பணிகள் குறித்து அவர்களுக்கு எடுத்துரைத்தார்.

மக்களுடன் நெருங்கிய தொடர்பில் இருந்தும், சேவை மனப்பான்மையோடு செயல்பட்டு, தங்கள் பகுதிகளின் வளர்ச்சிக்கு சிறந்த முறையில் அவர்கள் பங்களிப்பார்கள் என்று தாம் உறுதியாக நம்புவதாக சமூக வலைதளத்தில் திரு. அமித்ஷா குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

சிந்து நதிநீர் ஒப்பந்தம் தொடர்பாக, சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட நடுவர் நீதிமன்றம் கடந்த 15-ஆம் தேதி வழங்கிய தீர்ப்பை இந்தியா நிராகரித்துள்ளது.

புதுதில்லியில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் திரு. ரன்தீர் ஜெய்ஸ்வால், இந்த நடுவர் நீதிமன்றத்தை இந்தியா ஒருபோதும் அங்கீகரித்தது

இல்லை என்றும், அதன் செயல்பாடுகள், தீர்ப்புகள் அல்லது முடிவுகள் எதுவும் இந்தியாவைக் கட்டுப்படுத்தாது என்றும் கூறினார்.

மேலும் இந்த ஒப்பந்தத்தை தற்காலிகமாக நிறுத்தி வைக்கும் இந்தியாவின் முடிவு தொடர்ந்து அமலில் இருக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

பஹல்காம் பயங்கரவாதத் தாக்குதலுக்குப் பிறகு, சிந்து நதி நீர் ஒப்பந்தத்தை தற்காலிகமாக நிறுத்தி வைப்பதாக இந்தியா அறிவித்திருந்தது.

<<<<>>>>

தலைநகர் தில்லியில், விமான எரிபொருளுக்கான மதிப்பு கூட்டு வரியை 25 சதவீதத்திலிருந்து 7 சதவீதமாகக் குறைத்து அம்மாநில அரசு உத்தரவிட்டுள்ளது.

விமானப் போக்குவரத்துத் துறைக்கு நிவாரணம் அளிக்கவும், சுற்றுலா மற்றும் தளவாடப் பணிகளை ஊக்குவிக்கவும் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக முதலமைச்சர் திருமதி ரேகா குப்தா கூறியுள்ளார்.

அதேவேளையில் போக்குவரத்து மற்றும் பொருளாதார நடவடிக்கைகளையும் வலுப்படுத்த வேண்டும் என்ற பிரதமர் திரு.

நரேந்திர மோடியின் வலியுறுத்தலுக்கு இணங்க இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த சலுகை ஆரம்பத்தில் ஆறு மாத காலத்திற்கு அமலில் இருக்கும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் நலன் மற்றும் தில்லியின் நலன் கருதி எடுக்கப்பட்டுள்ள இந்த முடிவினால், அரசுக்கு சுமார் 985 கோடி ரூபாய் வருவாய் இழப்பு ஏற்படக்கூடும் என்று மதிப்பிடப்பட்டுள்ளதாகவும் திருமதி ரேகா குப்தா மேலும் கூறினார்.

<<<<>>>>

கொல்கத்தா ஆர்.ஜி. கர் மருத்துவக் கல்லூரி பயிற்சி மருத்துவர், பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு கொலை செய்யப்பட்ட வழக்கு, கொல்கத்தா உயர்நீதிமன்றத்தின் புதிய அமர்வு முன்பு விரைவில் விசாரணைக்கு வரவுள்ளது.

முன்னதாக, இந்த வழக்கை விசாரித்து வந்த நீதியரசர்கள் திரு. ராஜா சேகர் மந்தா மற்றும் திருமதி. ராய் சட்டோபாத்யாயா ஆகியோர் அடங்கிய அமர்வு, கடந்த மே 11-ஆம் தேதி இந்த வழக்கில் இருந்து விலகியது.

இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டு, கடந்தாண்டு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட சஞ்சய் ராய்க்கு மரண தண்டனை விதிக்க வேண்டும் என்று மத்திய புலனாய்வு அமைப்பான சிபிஐ கோரிக்கை விடுத்துள்ளது.

அதே நேரத்தில், சஞ்சய் ராய் தன்னை விடுதலை செய்யுமாறு மேல்முறையீடு செய்துள்ளார்.

<<<<>>>>

மத்தியப்பிரதேச மாநிலம் தார் மாவட்டத்தில் உள்ள போஜ்சாலா வளாகத்தில் வரலாற்றுச் சிறப்புமிக்க நினைவுச் சின்னத்தில், பொதுமக்கள் வழிபாடு நடத்தவும், இதர ஆன்மீகப் பணிகளை மேற்கொள்ளவும் இந்திய தொல்லியல் துறை அனுமதி வழங்கியுள்ளது.

இந்த வளாகம், அன்னை சரஸ்வதி தேவியின் கோவில் என்று மத்தியப்பிரதேச உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்ததையடுத்து தொல்லியல் துறை இந்த முக்கிய முடிவை எடுத்துள்ளது.

<<<<>>>>

மகாராஷ்டிரா மாநிலம் கட்ச்ரோலியில் மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் 8 பேர் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று மத்திய ரிசர்வ் காவல்படையும், மாநில காவல்துறையும் இணைந்து மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின்போது இவர்கள் கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாவோயிஸ்ட் அமைப்பின் முக்கிய பொறுப்புகளில் இருந்த 5 பேர் பாதுகாப்பு படையினரிடம் சரணடைந்ததாக காவல்துறை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கைது செய்யப்பட்ட மாவோயிஸ்ட் அமைப்பினரிடம் இருந்து துப்பாக்கிகளும், வெடிமருந்துகளும் பறிமுதல் செய்யப்பட்டன.

<<<<>>>>

மத்திய வெளியுறவுத்துறை இணை அமைச்சர் திரு. பபித்ரா மார்கெரிட்டா, டொமினிகா நாட்டின் வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. வின்ஸ் ஹென்டர்சனை நேற்று சந்தித்து, இரு நாடுகளுக்கும் இடையிலான உறவை வலுப்படுத்துவது குறித்து விரிவாக ஆலோசனை நடத்தினார்.

இந்த சந்திப்பின் போது, மருந்தியல் தொடர்பாக இரண்டு முக்கிய புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தானது.

முன்னதாக, டொமினிகா நாட்டின் தற்காலிக பிரதமர் திரு. இர்விங் மெக்கின்டயரைச் சந்தித்த திரு. பபித்ரா மார்கெரிட்டா,

பிரதமர் திரு. நரேந்திர மோடியின் வாழ்த்துகளை அவருக்குத் தெரிவித்தார்.

தொடர்ந்து, ரோஸோ நகரில் டொமினிகா நாட்டின் அதிபர் திருமதி சில்வானி பர்ட்டனையும் அவர் நேரில் சந்தித்துப் பேசினார்.

<<<<>>>>

லாட்வியா நாட்டின் புதிய அரசை அமைக்கும் பொறுப்பை, எதிர்க்கட்சியான யுனைடெட் லிஸ்ட் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. **Andris Kulbergs** இடம் அந்நாட்டு அதிபர் திரு. எட்கர்ஸ் ரின்கேவிக்ஸ் ஒப்படைத்துள்ளார்.

செய்தியாளர்களிடம் பேசிய அவர், 'நியூ யூனிட்டி' கட்சியைச் சேர்ந்த பிரதமர் திருமதி எவிகா சிலினா தனது பதவியை ராஜினாமா செய்வதாக அறிவித்ததைத் தொடர்ந்து, பல்வேறு அரசியல் கட்சி பிரதிநிதிகளுடன் நடத்திய ஆலோசனையின் அடிப்படையில் இந்த முடிவை எடுத்துள்ளதாக அவர் கூறியுள்ளார்.

மேலும், புதிய அரசை அமைக்க நியமிக்கப்பட்டுள்ள திரு. ஆண்ட்ரிஸ் குல்பேர்க்ஸ், கூட்டணி கட்சிகளின் விவரம், புதிய அரசின் கொள்கை வரைவு உள்ளிட்டவற்றை வரும் 25-ஆம் தேதிக்குள் சமர்ப்பிக்க வேண்டும் என்று திரு. ரின்கேவிக்ஸ் உத்தரவிட்டுள்ளார்.

<<<<>>>>

தாய்லாந்து ஓபன் பேட்மிண்டன் ஆடவர் இரட்டையர் பிரிவு இறுதிப் போட்டியில் இந்தியாவின் சாத்விக் சாய்ராஜ் - சிராக் ஷெட்டி இணை, இன்று இந்தோனேஷியாவின் Leo Rolly - Daniel Martin இணையை எதிர்கொள்கிறது.

பேங்காக்கில் நடைபெற உள்ள இந்தப் போட்டி இன்று காலை மணி 10.50க்கு தொடங்க உள்ளது.

-------------

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் கொல்கத்தா அணி 29 ரன் வித்தியாசத்தில் குஜராத் அணியை வென்றது.

கொல்கத்தாவில் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் பேட் செய்த கொல்கத்தா அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 2 விக்கெட் இழப்புக்கு 247 ரன் எடுத்தது.

248 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய குஜராத் அணி 4 விக்கெட் இழப்புக்கு 218 ரன் மட்டுமே எடுத்து தோல்வியடைந்தது.

தரம்சாலாவில் இன்று நடைபெற உள்ள போட்டியில் பஞ்சாப் அணி - பெங்களூரு அணியை எதிர்கொள்கிறது.

இப்போட்டி மாலை மணி 3.30க்கு தொடங்குகிறது.

தில்லியில் நடைபெற உள்ள மற்றொரு போட்டியில் தில்லி அணி - ராஜஸ்தான் அணியை எதிர்கொள்கிறது.

இப்போட்டி இரவு 7.30 மணிக்கு தொடங்குகிறது.

----------------

ஐ.எஸ்.எல். கால்பந்து போட்டியில் பெங்களூரு அணி 2-1 என்ற கோல் கணக்கில் சென்னை அணியை வென்றது.

மற்றொரு போட்டியில் பஞ்சாப் அணி 3-2 என்ற கோல் கணக்கில் ஒடிசா அணியை தோற்கடித்தது.

இன்று மாலை 5 மணிக்கு நடைபெற உள்ள ஆட்டத்தில் காசி அணி - தில்லி அணியையும், இரவு மணி 7.30க்கு நடைபெற உள்ள மற்றொரு ஆட்டத்தில் மோகன் பஹான் அணி - ஈஸ்ட் பெங்கால் அணியையும் எதிர்கொள்ள உள்ளன.

--------------

போபாலில் நடைபெற்றுவரும் துப்பாக்கிச் சுடுதல் சாம்பியன்ஷிப் போட்டியில் மகளிருக்கான 10 மீட்டர் ஏர் ரைபிள் பிரிவில், ரயில்வே

அணியைச் சேர்ந்த சோனம் உத்தம் மாஸ்கர் தங்கப் பதக்கம் வென்றார்.

குஜராத் மாநிலத்தைச் சேர்ந்த இளவேனில் வெள்ளிப் பதக்கமும், மகாராஷ்டிர மாநிலத்தைச் சேர்ந்த ஆர்யா போர்ஸே வெண்கலப் பதக்கமும் வென்றனர்.

**<<<<The End>>>>**